விலை ரூபா 1.25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 மாசி 13 ஐ. அல் 22 இதழ் 14
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25-2-84

## 'துப்பாக்கிப்பிரயோகத்தில் பயங்கரவாதிகள் சம்பந்தப்படவில்லை''

### இராணுவத் தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அவர்கள் செய்த துப்பாக்கிப்பிரயோகத்தில் தற்செயலாக இராணுவ வீரரொருவர் கொல்லப்பட்டார்''.

இவ்வாறு ராஜாங்க அமைச்சின் செயலாளர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி இது தொடர்பாகத் தெரிவிக்கையில்; ''இந்த துப்பாக்கிப் பிரயோகம் வேறு எவராலும் செய்யப்படவில்லையென்றும், பயங்கரவாதிகள் எவரும் இதில் சம்பந்தப்படவில்லையென்றும்'' கூறியுள்ளார் என்றும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில், குருநகர் முகாமின் முன்பகுதி தரைமட்டமாகி இருப்பதை இங்கு காணலாம். இந்த முகாமை முன்னர் இராணுவத்தினர் பயன்படுத்தியிருந்தனர். கடந்த வருடம் ஜூலை கலவரத்தினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்தவர்கள் சிலர் இந்த முகாமின் பின்பகுதியில் இருக்கின்றனர். இக்குண்டுவெடிப்புச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. படம்: தேவா

## ● வேலணை இலங்கைவங்கிக் கொள்ளை:

# பொலிசார்சூட்டில் ஒருவர் பலியானார்!

## கொள்ளைக்கு பயன்படுத்திய லொறி மர்மமறைவு; வான்கள் கைப்பற்றப்பட்டன!

(ஏ. வி. மாணிக்கம்)

**வேலணை இலங்கை வங்கியில் இரண்டு இரும்புப் பெட்டிகளை கொள்ளை அடித்துக்கொண்டு யாழ்நகர் நோக்கி வந்துகொண்டிருந்த கோஷ்டி மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது வாலிபர் ஒருவர் பலியானார்! இக்கோஷ்டியைச் சேர்ந்த மற்றவர்கள் தப்பியோடிவிட்டனர்!**

கொள்ளை அடிப்பதற்காகப் பயன்படுத்திய இரு வான்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று அதிகாலை 1.15 மணியளவில் ஊர்காவற்றுறைப் பொலிசார் ரோந்து சுற்றிக்கொண்டிருந்தபோது வேலணையில் உள்ள இலங்கை வங்கிக்குள் 'லைட்' வெளிச்சம் தெரிந்ததையும் அதேநேரம் மூன்று வாகனங்கள் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்ததையும் அவதானித்துச் சந்தேகம் கொண்டு, யாழ். பொலிசாருக்குத் தகவல் கொடுத்தனர்.

சுமார் 2-15 மணியளவில் யாழ் பொலிஸ் கோஷ்டியினர் ஆயுதபாணிகளாக யாழ் பண்ணைப் பாலம் முடிவுறும் சுற்றுவட்டத்தில் கொள்ளை அடித்தவர்களைப் பார்த்து நின்றனராம்.

அந்தச் சுற்றுவட்டத்தின் இருமருங்கும் பாதைகளைத் தடைசெய்யும் நோக்குடன் இரு ஜீப்வண்டிகளை நிறுத்தி வைத்திருந்தனர்.

பண்ணைப்பாலத்தை நோக்கி லொறி ஒன்றும் இருவான்களும் வந்துகொண்டிருந்தன என்றும் லொறியை நோக்கிப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது பாதையைத் தடை செய்திருந்த ஜீப் வண்டியை லாவகமாகவும், சாதுரியமாகவும் விலக்கிக்கொண்டு, கடுகதி வேகத்தில் லொறி தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து வந்த இரு

[8-ம் பக்கம் பார்க்க]

## துப்பாக்கிச்சூட்டுக்கு இளம்பெண் பலி!

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை குருநகர் இராஜசிங்கம் வீதியில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் எதிர்பாராதவிதமாக இளம்பெண் ஒருவர் பலியானார்.

யசோதா டேவிட் [19 வயது] என்பவரே வயிற்றில் சூடுபட்டு பலியானவராவார்.

அவரது தாயாரான மேரி ரோசலின் எட்வேட் [45 வயது] சகோதரர் டேவிட் சுரேஷ் [13 வயது] துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ''வீட்டில் சோதனையிட 35 வீரருடன் சென்றேன்''

### மரணவிசாரணையில் காப்டன் சாட்சியம்

[ஏ. வி. மாணிக்கம்]

''அதிகாலை ஐந்து மணியளவில் குருநகர் முகாம் பக்கமாக வெடிச்சத்தம் கேட்டது. எங்களைச் சுற்றியும் கட்டிடத்துகள்கள் விழுந்தன. வெடிச்சத்தமொன்று கேட்டதைத் தொடர்ந்து திருப்பிச் சுட்டோம். கோப்ரல் விமலசேன, வாய்க்காலில் இரத்தவெள்ளத்தில் முனகிக்கொண்டிருந்தார்''

பலாலி இராணுவ முகாம் கெமுனு றெஜிமன்ட் பிரிவைச் சேர்ந்த காப்டன் பண்டார விஜயரத்ன [30- வயது] சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் நீதிமன்ற மேலதிக

(8-ம் பக்கம் பார்க்க)

## பஸ் வண்டிகள் ஏல விற்பனை

இந்தியாவிலிருந்து புதிதாக இறக்குமதிசெய்யப்பட்டு ஒரு மாதம் மட்டுமே பாவிக்கப்பட்டு கடந்த யூலைக் கலவரத்தின்போது பாதிக்கப்பட்ட 30 ஸ்ரீ 1672, 30 ஸ்ரீ 1673 இலக்கங்கள் உடைய இரு

**அசோக் லேலன்ட் பஸ் வண்டிகள்**

26-2-84 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு காங்கேசன் ரவல்ஸ் ஸ்தாபனத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பஸ் வண்டிகளின் அடித்தளம் (CHASIS) என்ஜின்— கியர்பொக்ஸ், முன் பின் அச்சுகள் (FRONT and REARAXLES COMPLETE) ஏனைய உதிரிப்பாகங்கள் உப உறுப்புக்கள் யாவும் நல்ல நிலையில் உள்ளன. ஏலத்தில் எடுப்பவருக்கு பதிவுப்புத்தகத்தோடு உரிமை மாற்றிக்கொடுக்கப்படும்.

உடைந்த வில்லுத்தகடுகள், சேதமடைந்த 55 ரயர்கள், 45 கலன் கொள்ளக்கூடிய 86 வெற்று ட்றம்களும் (DRUMS) அன்று ஏலத்தில் விற்கப்படும்

மேற்படி வாகனங்களைப் பார்வையிட விரும்புவோர் தினசரி (9.00-5 00) காரியாலய நேரங்களில் எமது காரியாலயத்தில் பார்வையிடலாம் விபரங்களையும் காரியாலயத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

நா. தியாகராசா
பொதுமுகாமையாளர்
காங்கேசன் ரவல்ஸ்

122. மெயின் வீதி,
காங்கேசன்துறை (889)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 783, ஆஸ்பத்திரி வீதியில் நாலு கடையுடன் சேர்ந்த மேல்மாடிக் கட்டிடம் விற்பனைக்குள்ளது. நேரில் சந்திக்கவும். 1012

கோப்பாய் வடக்கு கண்ணகை அம்மன் வீதியில் கோப்பாய் உரும்பிராய் வீதிக்கு அண்மையில் 3¾ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் வீடு (கமலபவனம்) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: வே செல்லையா, 315, கண்டி வீதி, பரந்தன். தொலைபேசி: 311. 928

காங்கேசன்துறை றோட்டில் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் ஒரு பரப்பு வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு. அ. குமாரசுவாமி, "பேராறு" 211, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். 931

புத்தம் புதிய 86 ஸ்ரீ லெம்பா ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. S. இராஜேந்திரம், ஞானவயிரவர் கோவில் லேன், உரும்பராய் கிழக்கு, உரும்பராய். 962

யாழ் மின்னவத் தொழிற்சாலைக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் (மதவடி லேன்) வீடுகட்டுவதற்கு உகந்த 1¼ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இ. முரளிதரன் 4/4 இவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். 986

EN மொடல் மொறிஸ் மைனர் கார் நல்ல நிலையில் உடனடி விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். 'அமுதசுரபி' 2-ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை. 995

கோப்பாய் வடக்கு கிருஷ்ணர் கோவில் தெருவில் கொத்தம்பையில் 5 பரப்புத்தோட்டநிலம் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு திருமதி இலக்குமி - செல்லையா, இலகடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். 845

"கோஸ்டர்" பயணிகள் ஏற்றும் வான் விற்பனைக்கு உண்டு. 29 சிறி தொடரிலக்கமுடையது. விபரங்களுக்கு: ராஜா தியேட்டர், யாழ்ப்பாணம். 998

வைரஹா பாம் ஒருநாள் புரொயிலர் குஞ்சுகள் வியாழக்கிழமைகளில் விநியோகிக்கப்படும். கைசெக்ஸ் பிறவுண் ஒரு மாத பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. N. சற்குணராசா அண்ட் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 909

மூன்று மாதத்திற்குமேலான மூன்று இறாத்தல் நிறை கொண்ட இறைச்சிக்குகந்த சேவல் கோழிகள் நிறைப்பிரகாரம் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். யூனிபோ (Unifo) உரும்பிராய். 980

முதிரைப் பலகையால் செய்யப்பட்ட கடை அலுமாரிகள், சோகேஸ், கவுண்டர்கள் விற்பனைக்கு உண்டு. இ. எ. ஆனந்தராசா, பிறேமா றேடேஸ், நெல்லியடி, கரவெட்டி. தொலைபேசி: 94, கரவெட்டி. 967

## தேவை

கோழி, மாடு பராமரிப்புக்கு அனுபவமுள்ளவர்களும் டைப்பிஸ் ஒருவரும் தேவை. சு. பாலேந்திரா 586 கண்டிவீதி, நெடுங்குளம் சந்தி, யாழ்ப்பாணம். 933

## விற்பனைக்கு

ஒருஅடி உயரமுடைய ஊரி எலுமிச்சைக்கன்றுகள் நல்ல இன சிதம்பரத்தை மாதுளை பதிகள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்ளவும். யூனிபோ- Unifo உரும்பிராய் 983

மானிப்பாய் மேற்கு பிரதான வீதியில் கட்டுடை உபதபாற்கந்தோருக்கு அருகாமையில் வீடுகட்ட அத்திவாரத்துடன் பிரயோசனங்களுடைய, கிணற்றுடன் 4½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: K. சிவகாந்தன். 25, கட்டுக்கரை வீதி, யாழ்ப்பாணம். 987

## தேவை

புடவை வியாபாரத்தில் இரண்டு வருட அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்க அன்னராஜா ஸ்ரோர்ஸ், 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 977

இ. போ. ச. விசேட சாரதிப் பயிற்சி (Teetotaller) பெற்ற, படித்த ஆங்கில தமிழ் அறிவுள்ள 23 வயது இளைஞனுக்கு சாரதித் தொழில் தேவை. விண்ணப்பிக்கவும்: க. முருகேசர் (பென்சனியர்) சரசாலை வடக்கு, சாவகச்சேரி. 930

அனுபவமும், திறமையும் உள்ள அச்சுக்கோப்பாளர்கள் (Compositors) தேவை. தகுதிக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படும். ஐம்பது வயதுக்கு மேற்பட்டோருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும். அத்துடன் அச்சுக்கோர்க்கும் பயிலுனர்களாக பயிற்சி பெற பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விளம்பர இல: 997, மே. பா. ஈழநாடு, சிவன்கோவில் மேற்கு வீதி, யாழ்ப்பாணம். 997

நல்ல நிலையில் உள்ள வரும்படி உள்ள தென்னம் தோட்டம் உடன் தேவை. சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1006 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1006

### யாழ். மாவட்ட வடிசாலைகள் விற்பனவுக் கூட்டுறவுச் சமாசம்

### வெற்றிடங்கள்

### வடிசாலை மேற்பார்வையாளர் பதவி (01)

தகமை:

க. பொ. த. (சாதாரணம்) விஞ்ஞான பாடங்களில் சித்தி எய்தியிருப்பதுடன் 30-45 வயதுக் கிடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்பார்வையாளர் பதவியில் 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். வடிகலன் இயக்குவதில் அனுபவம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம்: 500 — 20/5 30/8 — 840

விண்ணப்பம் முடிவடையும் திகதி: 1984 - ம் ஆண்டு பங்குனி 10-ம் திகதி.

தலைவர்,
யாழ். மாவட்ட வடிசாலைகள் விற்பனவு கூட்டுறவுச் சங்க சமாசம்.
தேசிய வீடமைப்பு செயலகம், கண்டி வீதி.
யாழ்ப்பாணம். 1007

### FOR SALE

Imported Showcases, (Curved) Cupboards Mirrors, Dinning and Kitchen Tables, and Sundry items on Sunday 26 th February Palmcourt, Main Street, Jaffna 1002

### முக்கிய அறிவித்தல்
### மின் விநியோகம்

1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 5-00 மணிவரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு அனுராதபுரம் - யாழ்ப்பாணம் 132 கே. வி. மின் மார்க்கம் தடைசெய்யவிருப்பதால், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு சுண்ணாகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை போன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி, யாழ்பிரதேசங்களின். பெரும்பாலான பகுதிகள் மின்சார விநியோகம் தடைப்படும் என அறியத்தருகின்றேன்.

மின் பொறியியலாளர்
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
842 சுன்னாகம்.

### உடன் தேவை

1. யாழ் நகரில் ஒலிப்பதிவு செய்யப்படும் ஒலிப்பதிவு நாடாக்களை விற்பனைசெய்ய பலபாகங்களிலும் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. உடன் விண்ணப்பிக்க.

2. புளொக் தயாரிப்பதில் அனுபவமுள்ள ஒருவர் உடன் தேவை. உடன் விண்ணப்பிக்க.

விளம்பர இல: 970,
மே/பா ஈழநாடு,
யாழ்ப்பாணம்,
970

### இடமாற்றம்

இல 188, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடிச் சந்தியடியில் நடைபெற்றுவந்த கடைச்சல், மின் ஒட்டு வேலைகள் தற்பொழுது 375 மணிக்கூட்டுவீதிக்கு [கன்னாதிட்டிவீதிச் சந்திக்கு அருகாமையில்] இடமாற்றப்பட்டுள்ளதென்பதை வாடிக்கைக்காரருக்கு அறியத்தருகிறோம்.

**விம்பிகம்பனி**

(948)

## வாடகைக்கு

யாழ். நகர எல்லைக்குள் வீடு வாடகைக்கு உண்டு இல. 573, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் 996

உடுவில் சுற்றுடலில் உள்ள பாடசாலைப் பிள்ளைகள் யாழ்ப்பாணம் பாடசாலைகளுக்குச் சென்றுதிரும்ப வான் வாடகைக்கு விடப்படும். பங்குனி முதலாந்திகதிக்குமுன்நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். கே குலேந்திரன் சலட்டு ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு. 941

## வாடகைக்கு

வீடியோ டெக் புதிய திரைப்பட வீடியோ கசற் என்பன வாடகைக்கு கொடுக்கப்படும். Stanly Centre கனகரத்தினம் கட்டிடம் (றெயில்வே கடவை அருகாமை) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 988

பருத்தித்துறை பஸ்நிலையத்திற்கு அருகாமையில் ஒரு கடை மட்டும் வாடகைக்குண்டு. வாடகை 800/- முற்பணம் 800 X 6 + 20000/-. ப. இரத்தினசபாபதி 46 பிரதான வீதி, பருத்தித்துறை 1005

### தொழிலாளர்கள் தேவை

யாழ்ப்பாணக்குடா நாட்டில் கடற்றொழில் தொடர்புள்ள வியாபாரத்தில் ஈடுபடும் ஒரு ஸ்தாபனத்திற்கு குறிப்பாக மீன்கொள்வனவிலும், விற்பனையிலும் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 1011 மே/பா ஈழநாடு,
யாழ்ப்பாணம். 1011

### புதிய வள்ளம் விற்பனைக்கு!

40 அடி நீளமான, வலிமையான, பெறுமதிமிக்க மரத்தால் செய்யப்பட்டு கடலில் இறக்கப்படாத புதிய வள்ளம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு கொள்ளவும்
றீகல் சினிமா
யாழ்ப்பாணம்,
(971)

### Home Finance Limited

1. 1984 MODEL ISUZU MINI BUSES AVAILABLE FOR SALE
2. FINANCE ARRANGEMENTS POSSIBLE.

Apply for Particulars:

To:
HOME FINANCE LTD.,
82, Kannathiddy Road,
Jaffna

### நன்றி நவிலல்

பலாலி தெற்கு சென்ஜேம்ஸ்வீதி வசாவிளானைச் சேர்ந்த திருமதி செல்லக்கண்டு டேவிட் அருளம்மாவின் 17-02-1984 வெள்ளிக்கிழமை நடைபெற்ற மரணச் சடங்கின்போதும், 8ம் நாள் திருப்பூசைவழிபாட்டில் கலந்து கொண்டு சகல விதங்களிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நேரில் வருகைதந்து ஆறுதல் கூறியும், ரெலக்ஸ், தொலைபேசி, தந்திமூலமாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்ட உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது அனுதாபம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யோ. செல்லக்கண்டு டேவிட்

அருள்வாசா, வசாவிளான்.

1014

### "உரிய காலத்தில் அரிய சந்தர்ப்பம்"

வரி
கணக்கியல்
கணக்காய்வு

## முகாமைத்துவம்

முகாமை
வர்த்தகம்
பொருளாதாரம்

கைத்தொழில் அதிபர்கள்! வர்த்தகர்கள்! மாணவர்கள்!
எதிர்பார்க்கும்
அரிய தகவல்கள்! விளக்கங்கள்! ஆய்வுகள்!
மாத சஞ்சிகையாக வெளிவருகிறது.

"MUHAMITHUVAM"
"A MAGAZINE ON MANAGEMENT"

வாசகர், சந்தாதாரர், விற்பனைமுகவர் தொடர்பு கொள்க.

"முகாமைத்துவம்" வெளியீட்டுப்பிரிவு

TAX AND ACCOUNTING SERVICES

37, பிரப்பங்குளம் லேன், யாழ்ப்பாணம்.

(994)

● சோவியத் யூனியன் கடும் தாக்கு

# "உலக நாடுகளை அமெரிக்கா ஏமாற்றுகிறது! சமாதான நாடாகப் பாசாங்கு செய்கிறது!!"

மாஸ்கோ, பெப். 24

அமெரிக்கா உலக நாடுகளை ஏமாற்றி வாழப்பார்க்கிறது என்று சோவியத்யூனியன் குற்றஞ் சாட்டியுள்ளது.

சமாதானத்தை விரும்பும் நாடாகத் தன்னைப் பாசாங்கு செய்துகொண்டு தனது காரியங்களைச் சாதித்துக்கொண்டிருக்கும் அமெரிக்காவின் 'விளையாட்டு'கள் சோவியத் யூனியனிடம் பலிக்காது என்றும் சாடியுள்ளது.

சோவியத் பிரதமராக இருந்த அந்ரபோவ் மறைந்தபின்னர், 'பிராவ்டா' வில் பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் குச்கிளேவ் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்தக் கண்டனக் குரல் எழுப்பப்பட்டுள்ளது.

அமெரிக்காமீது கிரெம்ளின் இப்படியான கடுமையான பாய்ச்சலைத் தொடுக்கவில்லை என்று உலக அரசியல் அவதானிகள் 'பிராவ்டா' அறிக்கை குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

மிக முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கையாக இதனை 'வெள்ளை மாளிகை'யும் கருதுமென்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

"அமெரிக்கா போர்வைக்குள் ஒழிந்து நின்றுகொண்டு ஊடுருவல் வேலைகளைச் செய்துகொண்டு வருகிறது. உலகத்தின் பல நாடுகளை இதன்மூலம் ஏமாற்றிவருகிறது. தன்னை ஒரு சமாதான நாடாகவும், சமாதானத்தையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் நாடென்றும் கூறிக்கொண்டு பாசாங்கு நாடாக மாறுகிறது! அமெரிக்காவின் பாசாங்கு சோவியத் யூனியனிடம் பலிக்கமாட்டாது!" என்று எச்சரித்துள்ள சோவியத் பாதுகாப்பு அமைச்சர், "எந்த ஆக்கிரமிப்பையும் முறியடிக்கக்கூடிய திறனும், வல்லமையும் நம்மிடம் இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

நவீன அணு ஆயுதங்கள் நம்மிடம் இருக்கின்றன. அமெரிக்கா இந்த ஆயுதங்களின் முன் நின்றுபிடிக்கமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார் அவர்.

நவீன யுகத்தில், சோவியத் யூனியன் தயாரித்துள்ள நவீன விதம் விதமான ஆயுதங்கள் அமெரிக்காவைத் தகர்த்துவிடும் அபார சக்தி கொண்டது! நாடுகளை ஏமாற்றப் பார்க்கும் ஆக்கிரமிப்புத்தனம் மிஞ்சுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாதென்று சோவியத் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

"தாக்குதல் எப்படியிருந்தாலும் முறியடித்துவிடுவோம். இதனை அமெரிக்கா உணரவேண்டும்!" என்றும் சாடியுள்ளார்.

---

✯ இந்தியப் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலியில்

# பஞ்சாப், ஹரியானா செய்திகளுக்குத் தணிக்கை!

புதுடில்லி. பெப். 24

பஞ்சாப் ஹரியானா மாநிலங்களில் நடக்கும் இனக்கலவரம் சம்பந்தமான செய்திகளைத் தணிக்கை செய்து வெளியிடுவதற்கு இந்தியப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

வானொலி, தொலைக்காட்சி போன்ற வெகுஜன தொடர்பு சாதனங்களும் இந்த கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ஏற்ப நடந்து கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளன.

பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில், கூடியளவு ஒற்றுமையான சூழ்நிலையை ஏற்படுத்த முயல்வது என்றும் தீர்மானித்துள்ளது.

புனிதஸ்தலங்களில் தாக்குதல்கள் நடப்பதையும், மயங்களைக் குறைகூறுவதையும், வன்முறையைத் தூண்டிவிடக் கூடியவகையில் செய்திகளை வெளியிடுவதையும் நிறுத்துவதென்ற இந்தக் கட்டுப்பாட்டினைத் தாமகவே செய்து கொள்வதற்கும் உடன்பாடு ஏற்பட்டது.

வன்முறையால் காயமடைந்தோர், இறந்தோர் போன்ற படங்களைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதில்லையென்றும் முடிவு எடுக்கப்பட்டது.

பாஞ்சாபில் கொலையும், கொள்ளையும். தாக்குதலும் தினசரி நடந்து கொண்டிருக்கின்றன.

---

மயிலிட்டி கொலை, கொலை முயற்சி:

## சந்தேகநபர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல்

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி கொலை, கொள்ளை முயற்சி சம்பவங்கள் தொடர்பாக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து மூன்று சந்தேகநபர்களில் ஒருவர் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டார். ஏனைய இருவரும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

மயிலிட்டியில் இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்ட கோஷ்டி மோதல் ஒன்றில் ஒருவர் துப்பாக்கிச் சூடுபட்டு கொலையுண்டதும், மேலும் பலர் துப்பாக்கிச் சூட்டுக்கும், வாள்வெட்டுக்கும் உள்ளானதும் தெரிந்ததே.

இதுதொடர்பாக மயிலிட்டியைச் சேர்ந்த வெங்கடாசலம் மதியழகன் அல்லது ரவி செல்லச்சாமி அல்லது பாலசுப்பிரமணியம் அல்லது பாலன், வைத்திலிங்கம் கணேசநாதன் அல்லது ஜெகன் ஆகியோர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் இந்நபர்கள் ஆஜர் செய்யப்பட்ட சமயம் காங்கேசன்துறைப்பொலிசார் இவர்கள்மீதான குற்றப்பத்திரத்தைத் தாக்கல்செய்தனர்.

முதல் இரு சந்தேகநபர்கள்மீதும் மயிலிட்டியைச் சேர்ந்த கந்தசாமி மணிவண்ணன் அல்லது ராகவன் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாகவும் கந்தசாமி முருகையா வேலுப்பிள்ளை ஆனந்தகிளி ஆகியோரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. மூன்றுவது சந்தேகநபர்மீது வேலும்மயிலும் மகேஸ்வரன் என்பவருக்கு வாளால் வெட்டி சிறுகாயம் விளைவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

---

# "பொய்யைப் பேசிப் பேசி பழகியவர் கருணாநிதி"

## தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். சாடுகிறார்

சென்னை, பெப். 24

"சிறைக்குப் பல தடவை சென்றவன் நானென்று மார் தட்டுகிறார் கருணாநிதி. அவரா சிறை சென்றார்? அவரைப் பிடித்துச் சென்றார்கள். கைதானவரைக் கோர்ட்டில் நிறுத்தினார்கள். "நான் நிரபராதி. சும்மா இருந்த என்மீது குற்றஞ்சாட்டினார்கள்" என்று கோர்ட்டில் வாதாடிய கருணாநிதிதான், சிறை பலகண்டவன் என்று பெருமையடிக்கிறார்"

இவ்வாறு சென்னையில் நடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில், தமிழக முதல்வர் எம். ஜி இராமச்சந்திரன் பேசுகையில் குறிப்பிட்டார்

அ. தி. மு. க கொள்கை பரப்புவதற்குப் பொறுப்பாளரான செல்வி ஜெயலலிதாவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

எம். ஜி ஆர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இடத்துக்கு இடம் ஒரு பேச்சுப் பேசுகிறார் கலைஞர். கல்கத்தாவில் பேசும் போது, விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம் என்கிறார். இங்கு நடக்கும் கூட்டங்களில் நான்தான் காரணம் என்று பேசுகிறார். அங்கொன்றும், இங்கொன்றும் பேசும் கருணாநிதியிடம் எப்படி நேர்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## அன்னை திரேசாவுக்கு டாக்டர் பட்டம்!

சென்னை, பெப். 24

அன்னை திரேசாவுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கவுள்ளது.

(வெ)

---

# எம்ஜி ஆர் விழாவில் அன்னை திரேசா!

சென்னை, பெப். 24

தமிழக முதலமைச்சர் எம். ஜி ஆர் பற்றிய புத்தக வெளியீட்டுவிழாவில் அன்னை திரேசா கலந்துகொள்கிறார்.

உலகமறிந்த மக்கள் சேவகி அன்னை திரேசா சென்னையில் எம். ஜி ஆர் புகழ்பாடும் நூல் ஒன்றின் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு, அவரையும், அவர் ஆற்றும் பணியையும் கௌரவிக்கிறார்

அடுத்தமாதம் இரண்டாம் திகதி தமிழ்நாட்டுக்கு வரும் போதே அன்னை திரேசா இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவுள்ளார்.

அடுத்தமாதம் 2ம் திகதி கொடைக்கானலில் பெண்கள் பல்கலைக்கழகத்தை அன்னை திரேசா திறந்து வைக்கிறார். இதனையடுத்து சென்னையில் எம். ஜி ஆர் பற்றிய புத்தக வெளியீட்டுவிழா நடைபெறும்.

---

## காலமானார்

சென்னை, பெப். 24

தி. மு க வின் தஞ்சாவூர்த் தொகுதி சட்டசபை உறுப்பினர் திரு. எஸ் நடராஜன் (60 வயது) நேற்று தஞ்சாவூரில் காலமானார்.

---

அனாதரவாககண்டுபிடிக்கப்பட்ட வான்

## ஓடமுடியாத நிலையில் பொலிஸ் நிலையத்தில் உள்ளதாம்!

(யாழ்ப்பாணம்)

சுமார் 15 இளைஞர்களால் இம்மாதம் 20 ம் திகதி கொள்ளையடிக்கப்பட்ட 80,000 பெறுமதியான வான் அனாதரவாக நிற்கக் கண்டுபிடிக்கப்பட்டது பற்றி யாழ் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது

இந்தவான் தற்போது ஓட முடியாத பழுதடைந்த நிலையில் பொலிஸ் நிலையத்திலுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வான் உரிமையாளருக்கு வானைக் கொடுக்கலாமென்றும்,

(7-ம் பக்கம் பார்க்க)

---


## வீடுகட்டுவோருக்கு ஓர் நற்செய்தி!

உங்களுக்குத் தேவையான சிறந்த

ஓடுகளை - 'சிறுன்' - 'நூருணி'

மலிவாக எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டெஸ்கோ டிரேடிங் கொம்பனி லிமிட்டட்

37/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

லொறிக் கூலி இலவசம்

1003

### மணிவாக்கு

மார்க்கண்டரர்காக மறலிபட்டபாட்டையுன்னிப்
பார்க்கின் அன்பர்க்கென்ன பயங்காண்பராபரமே.

— தாயுமானவர்

## நமது நோக்கு

### இணைக்கமுடியாத இடைவெளி இணைத்தேயாக வேண்டும்

முடியாது (Impossible) என்ற சொல்லை அகராதியிலிருந்து நீக்கிவிடு' என்று சொன்னாராம் பிரெஞ்சு ராணுவமாமேதை நெப்போலியன்.

இது நம்பக்கூடிய சம்பவம் என்பது அவருடைய அபூர்வமான சாதனைகளிலிருந்து அறியலாம்.

மனமுண்டானால் இடம் உண்டு என்பதே இதன் அடிப்படைக்கருத்து.

அரசின் நான்காவது பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நிகழ்த்திய பேருரை நெப்போலியன் விடுத்த கோரிக்கையை நினைவூட்டுவது போல் அமைந்திருக்கிறது.

வரலாற்று ரீதியில் ஆரம்பமான தமது உரையில் ஐ. தே. கட்சியை ஆரம்பித்து பல பிரபல தமிழ்த்தலைவர்களைச் சேர்த்துக் கொண்ட முதற் பிரதமர் டி. எஸ் சேனநாயக்காவைக் குறிப்பிட்டிருப்பது சிந்தனைக்குரியது.

'சிறுபான்மைச் சமூகத்தினர் தமக்கு எவ்வித தீங்கும் ஏற்படுமென்று அச்சம் கொள்ள வேண்டியதில்லை' என்று அமரர் டீஎஸ் அளித்த வாக்குறுதி அவருடைய வாழ்நாளிலேயே காற்றுடன் பறக்கத் தொடங்கியது. ஐ. தே. கட்சி தமிழ்மக்களைப் பொறுத்தளவில் ஒரு மூழ்கும் கப்பலென்று அதில் ஏறிக் கொண்ட தமிழ் 'எலிகள்' வெளியேறின.

அன்று தொட்டு இன்று வரைக்கும் சிறுபான்மையரென்ற "சாம்பார்" பேசப்படுகிறது; சிலர் இதனைச் சுவைத்தாலும் தமிழ் மக்கள், தமிழ்பேசும் மக்கள் ஒரு கணிசமான சமுதாயமென்ற உணர்வில் ஆட்சிக்கு வந்த எந்தக்கட்சியிடமும் நியாயம் பெறவில்லை.

இன்று தமிழர் பிரச்னை உலகளாவிய நிலையில், குறிப்பாக பாரத நாட்டில் இத்தகைய பிரபலம் பெற்றிருப்பதற்கு ஆடிக் கலவரமே முக்கிய காரணம்.

பிரிவினை பயங்கரவாதம் என்ற பேரிலேயே தமிழ் மக்களுக்கு இன்றைய அக்கிரமங்கள் நடைபெறுகின்றன. இதனை உணராத தலைவர்கள் தெரிந்தோ தெரியாமலோ இவ்வித கொடுமைகளை ஆதரிப்பது தமிழ் மக்களின் இன்றைய மிக முக்கியமான பிரச்னை.

இந்த நிலையில் இந்த வரலாற்று முக்கியம் வாய்ந்த தினத்தில் நாட்டின் பாதுகாப்பு, மக்களின் சுபீட்சம் ஊசலாடும் வேளையில் ஜனாதிபதி ஆற்றிய உரையும், அதன் சமயோசிதமும் தமிழ் மக்களுக்கு மீண்டும் ஒரு நம்பிக்கை ஒளியின் நிழல் தோற்றும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

முக்கியமாக, பிரிவினை கோரும் இளைஞர்களின் தீவிர போக்கைப் புரிந்து கொள்ளும் அவா ஜனாதிபதியின் மனோபாவத்தில் பெருமாற்றத்தைக் குறிக்கின்றது.

ஏழு எம். பி.க்களைக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சிங்கள மக்களின் உள்ளக்கிடக்கையில் தமது மனதை மட்டுப்படுத்திக் கொண்டது ஏற்கனவே தெரியக் கூடியதாக விருந்தது.

ஜனாதிபதியின் இன்றைய பொறுப்பு முழு நாட்டின் பாதுகாப்பு; எல்லா மக்களின் நலம்; பிரிவினையை ஏற்க மறுத்த சிங்கள மக்களும் அரசும், இவ்வளவு காலமும் எவ்வித பாதுகாப்புமின்றி ஆட்சியின் தயவிலும் இராணுவத்தின் கெடுபிடியிலும் அவஸ்தைப்படும் மக்களுக்கு என்ன முடிவு கொண்டுள்ளனர்? அதனைத் துரிதப்படுத்தாமல் பேசிப் பேசிக் காலங்கழித்ததன் விளைவே இன்றைய அதிதீவிரப் போக்கு.

அப்போக்கு சர்வகட்சி மகாநாட்டு உடன்பாட்டைக் கடினமாக்குவது மெய்யானால், அதே சமயம் அதனை அகற்றுவதற்கு நியாயமான தீர்வைத் துரிதப்படுத்துவதால் நிலைமையை சாந்தப்படுத்த முடியும்.

ஆட்சிக்கு சரியான முடிவெடுக்க வேண்டிய தைரியமும் ஞானமும் ஆண்டவன் அருள வேண்டும்.

# 5 வருட சேவையில் அறவழிப்போராட்டக் குழு

**25-2-79** என்பது ஐந்து வருடங்களுக்கு முன்னைய ஒரு திகதிதான். அவ்வேளை தொடக்கப்பட்ட ஓர் இயக்கம் இதுவரை ஐந்து கூட்டங்களுடன் மட்டும் நின்றிருக்கலாம். இதற்கு எதிர்மாறான தொடர்ந்த சேவையையும் துணிந்த கொள்கையும் ஆழ்ந்த அர்ப்பணிப்பையும் அறவழிப் போராட்டக் குழுவின் ஐந்து வருட வளர்ச்சியிலே காண்கிறோம்.

25-2-79ம் திகதியன்று கைதடியில் 25 தொண்டர்கள் கூடி இதனை ஆரம்பித்தனர். இன்று இது நாடறிந்த ஒரு நல்ல இயக்கமாய் உள்ளது இது தொடாத அநீதனத் தொண்டு இல்லை எனலாம். இக்குழுவின் தோற்றம் புனுகு சவ்வாது பூசியதல்ல. சேறும் வெயிலும் வியர்வையும் தோய்ந்ததே.

1979ம் ஆண்டு சாதிவேறுபாட்டை எதிர்த்துக் கறுப்புப் பட்டி இயக்கத்தை ஆரம்பித்தது. இதன் கொடுமையைச் சாடி ஊர்வலம் நடத்தப்பட்டது. உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது அவ்வேளை மறைந்த பா. உ. திரு சி. கதிரவேலுப்பிள்ளையவர்களின் பங்கும் சிறிதல்ல. இவை வெறும் ஆர்ப்பாட்ட ரீதியில் நடத்தப்படவில்லை. உள்ளத்தைத் தொடும் அன்பு வகைகளே கையாளப்பட்டன. நகரசுத்தித் தொழிலாளர்களின் கடமைகளை - மலசலகூடவேலை உட்பட அவர்களின் வேலைகளை - குழுவினர் மேற்கொண்டு தொழிலின் மேம்பாட்டை உணர்த்தியதுண்டு.

புனித கோவில்களிலே உயிர்ப்பலியிடும் கொடுமையை எதிர்த்து இவர்கள் எடுத்த நடவடிக்கை, அது பூண்டோடு ஒழிய பெருவாக உதவியதை மறந்திடலாகாது.

தம்மை ஆக்குவதற்காக நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளும் ஏராளம். இதில் வெளிநாட்டாரும் பங்குபற்றிப் பயன் பெற்றனர். உதவவும் செய்தனர்.

சீதனக் கொடுமை நம் சமூகத்தில் இன்னுமொரு சாபக்கேடல்லவா? இதற்கும் சாதிக் கொடுமைக்கும் இரு கொடும்பாவிகள் 1980 இல் ஊர்வலமாய்க் கொண்டு எரிக்கப்பட்டன. பரந்து விரிந்த பிரார்த்தனைக் கூட்டங்களும் உண்ணாவிரதங்களும் மேற்கொள்ளப்பட்டன. அறவழிப் போராட்டக் குழு கைக்கொண்ட அன்பு மார்க்கத்தால் பூட்டப்பட்டிருந்த பல பெரும் கோவிற் கதவுகள் அனைவர்க்கும் திறந்த கதவுகளாயின!

**நாக. பத்மநாதன்**

"தாகித்து வந்தவருக்கு செம்பில் தண்ணீர் கொடுத்திடச் சம்மதியாது" என்ற கூறல் நிலையை எம் நாட்டில் இன்றும் நேரிற்காணலாம். இங்கு வெளிக்கிணற்றில் ஒருவர் குடிதண்ணீர் அள்ளமுடியாத கொடுமையின் சிகரத்தைக் காணலாம் இதற்கெல்லாம் எம்குழுவினர் வகை காணத் தயங்கியதில்லை. 1980இலும் தொடர்ந்தும் நடைமுறையில் இவர்கள் பல சாதி, சீதன ஒழிப்புத் திருமணங்களையும் நடத்தியுள்ளனர்.

சர்வதேச ரீதியிலான மனித உரிமை தினமும் அதன் நடைமுறை இலட்சியமும் அறவழிப் போராட்டத்தின் அழுப்பதித்த அம்சங்களாகும். சர்வதேச யுத்த எதிர்ப்பாளர் சபையில் இவர்களும் அங்கத்தவர்களல்லவா? இவ்விதம் எது கடமை என்ற கேள்விக்கு நல்லோர்க்கு நல்லவை எல்லாம் கடனே எனவள்ளுவம் விடைதருகிறது அறவழிப் போராட்டக் குழுவின் நிலையும் நிலைப்பாடும் இதுவே.

அனுதரவான இடங்களிலெல்லாம் இவர்களது சிரமதானத்தொண்டுகள் பற்பல அவை எரிந்த கூரைகளையும் இடிந்த வீடுகளையும் கரடுமுரடான பாதைகளையும் சீர்திருத்த உதவியுள்ளன. நோயின் நலிவையும் போக்கியுள்ளன. வெள்ள நிவாரண வேலைகள் எரிந்தொழிந்த யாழ். நூல்நிலையத்திற்கு உதவும்பணி தந்தைசெல்வாவின் நினைவாலயப்பிரார்த்தனைகள் எனப் பலவும் கடமைகளே! அன்பு அகிம்சை எளிமை என்பது இக்குழுவின் சின்னமாகும். உலகின் பல்வேறு நாட்டின் தொடர்பிருப்பினும் எளிமை குன்றாத உழைப்பையே இங்கு காண்கிறோம்.

காந்தியவாதி பேராசிரியர் நேசையா அவர்கள் இதன்வழிகாட்டிகளில் ஒருவர். திறம்பட இயங்கும் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் குழுவின் முழுநேர ஊழியராவர் இவ்விதம் அர்ப்பணித்தவர்பலர். இதன் ஸ்தாபகர் திரு க. சச்சிதானந்தன் ஒரு இலட்சாதிபதியல்ல எனினும் அவரது பங்களிப்பு காசாகவும் ரூபா 25,000 என அறியமுடிந்தது! 800பேரைக் கொண்ட கைதடி முகாம் இவர்களது தொண்டின் இன்னொரு எடுத்துக்காட்டு

இவ்விதம் அரிய கட்டுக்கோப்பையும் வளர்ச்சியையும் இக்குழு எய்தியுள்ளது. இது இடருற்ற எம் இனத்திற்கு ஒரு மருந்தாகட்டும்.

## வண். வைத்தீஸ்வரர் மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வரர் தேவாலய மகோற்சவ உற்சவம் 25ம் திகதி பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும், தினமும் காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் வசந்தமண்டபப்பூசை நடைபெறும். அடுத்த மாதம் 8ம் திகதி மாலை 6;30க்கு சப்பற உற்சவமும் 16ம் திகதி காலை 7மணிக்கு பூசைநடைபெற்று காலை 9 மணிக்கு சுவாமி தேருக்கு வருதலும் மாலை 4மணிக்கு தேரிலிருந்து இறங்குதலும் மறுநாள் 17ம் திகதி காலை 10-80 க்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

## சிறுகதைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கதிர்காமநாதன் ஞாபகார்த்தமாக, சிறுகதைப் போட்டியொன்றினை "தாரகை" சஞ்சிகை நடத்தவுள்ளது.

இப்போட்டிக்கான முடிவுத் திகதி இம்மாதம் 29 ஆகும். ஈழத்து மண்வாசனையுள்ள சிறுகதைகளே போட்டிக்கு விரும்பப்படுகின்றனவாம்.

## "இளைஞர்புரம் — 84"

# ஒரு வரலாற்று நிகழ்வு!

— எம். அன்ரனிசாமி —

[தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்]

எமது எதிர்காலச் சிற்பிகளான இன்றைய இளைஞர்கள், இயற்கை எழில்கொஞ்சும் புராதன இராஜதானியான பொலனறுவையில் சமீபிக்கும் நன்னாள் இம்மாதம் 25ம் திகதி.

'இளைஞர்புரம்-84' என அழைக்கப்படும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இளைஞர் முகாமில் நாடுமுழுவதிலுமிருந்து சகல இன, மத, இளைஞர் யுவதிகளும் ஒன்று கலக்கின்றனர்.

தமது நீண்டகால பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் இன்றைய அரசும் அரசியல் கட்சிகளும் சமைநிறுவனங்களும் முயற்சித்துவரும் இவ்வேளையில் இந்த இன, மத, மொழி, பேதமற்ற இளைஞர் முகாம் ஒரு வரலாற்று நிகழ்வு என்றே கூறலாம்.

"வன்முறைகள்மூலம் அழிவுப் பாதையை நோக்கிச் செல்லும் இன்றைய இளைஞர் சமுதாயத்தினரிடையே அன்னியோன்யத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தி அவர்களது ஆக்கத்திறன்களை நாட்டு அபிவிருத்தியில் பங்குகொள்ள செய்வதே இம்முகாமின் பிரதான நோக்கம், இதற்கான பயிற்சியையும் ஊக்கத்தையும் பெற்றுத்தருவதே எமது கடமை. இதற்கு இளைஞர் சமுதாயத்தின் ஒத்துழைப்பு எமக்குத்தேவை."

இளைஞர் விவகார, வேலை வாய்ப்பு அமைச்சின் செயலாளரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தலைவருமான திரு. சரித்த ரத்வத்தை இம்முகாம் பற்றி செய்தி வெளியிடுகையில் இளைஞர்களை நோக்கி இவ்வாறு நேசக்கரம் நீட்டுகிறார்.

அகில இலங்கையிலும் செயல்படும் இளைஞர் கழக நிகழ்ச்சி திட்டங்கள் ஊடாக இளைஞர்/யுவதிகள் இம் முகாமில் கலந்து கொள்வார்கள்.

முதல் கட்டமாக 1979ம் ஆண்டு இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட 35 கிராமங்களில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் கழக செயற்திட்டம் இன்று அகில இலங்கை ரீதியில் வியாபித்து 2 5000க்கும் அதிகமான இளைஞர் கழகங்களை உள்ளடக்கி உள்ளன. கடந்த வருடம் மே மாதம் ஜனாதிபதி அவர்களினது தலைமையில் நடைபெற்ற இளைஞர் கழக தேசிய சம்மேளனத்தினூடாக ஒன்றிணைக்கப்பட்டுள்ள தேசிய அபிவிருத்திச் சேவை, விளையாட்டுத் துறை, கலாசாரத்துறை, கல்வி சமூகசேவைகள்போன்ற துறையில் இன்று முன்னணியில் நிற்கின்றது.

எம் நாட்டின் அபிவிருத்திக்காக தம் சேவைகளை அர்ப்பணிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு தம் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதையும் 1985ம் ஆண்டு நடைபெறவுள்ள சர்வதேச இளைஞர் ஆண்டுக்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு இளைஞர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்டே கல்வி, இளைஞர் விவகார வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்காவின் ஆலோசனையின் பேரில் இம்முகாம் இடம்பெறுகிறது.

இலங்கையில் முதல் முறையாக அதிகளவிலான இளைஞர் யுவதிகள் பங்குகொள்ளும் "இளைஞர் புரம்"-84 ஒர் இளைஞர் நகரின் அமைப்பில் நடைபெறும் இளைஞர் [illegible] பரியாலனம், பாதுகாப்பு தினசரி நிகழ்ச்சிகள் நடத்துதல், சுகாதாரநடவடிக்கைகள் உட்பட அனைத்தும் இளைஞர் யுவதிகளினால் தெரிவுசெய்யப்பட்ட குழுக்களினாலேயே நடத்தப்படுகிறது.

இம் முகாமின் இறுதிநாள் பெருவிழாவாகக் கொண்டாடப்பட இருக்கின்றது.

ஜனாதிபதி பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில் கல்வி, இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா உட்பட பல அமைச்சர்களும், எம். பிக்களும் பங்குபற்றுகின்றனர்.

# தங்கம் கடத்திய இலங்கையருக்கு


## ரூபா 1 கோடி அபராதம்!

[கொழும்பு]

இந்தியாவுக்குத் தங்கம் கடத்த முயன்ற இலங்கையருக்கு சுங்கப் பகுதி ஒரு கோடி ரூபா அபராதம் விதித்துள்ளது.

இருபத்தைந்து லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தைக் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து இவர் கடத்திச் செல்ல முயன்றபோது சிக்கினர்.

சுங்கப் பகுதியினர் விசாரணையின் பின்னர், தங்கத்தைப் பறிமுதல் செய்ததுடன், 1 கோடி ரூபா அபராதமும் விதித்தனர்.



அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க பிரதி உதவி செயலாளர் திரு ஹோவார்ட் பி. ஷாஃப்பா இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவை அவரது மாளிகையில் சந்தித்து ஆலோசனைகள் நடத்தினர்.

### அண்மைச் சம்பவங்களை துப்பறிய

# விசேட பொலிஸ் கோஷ்டி யாழ். வந்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் நடந்த பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக துப்பறிவதற்காக கொழும்பிலிருந்து விசேட பொலிஸ் கோஷ்டியொன்று இங்கு வந்துள்ளது.

உதவி பொலிஸ் அதிபர் ஒருவர் தலைமையில் வந்துள்ள இக்கோஷ்டியினர் சங்கானை, பண்டத்தரிப்பு கொள்ளைச் சம்பவங்கள், நீதிமன்ற கைதிகள் கடத்தல் சம்பவம், தமிழ் ஈழ இராணுவம் என்னும் இயக்கத்தின நடவடிக்கைகள் குறித்து விசாரணையில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து பல இடங்களுக்கும் சென்று இக்கோஷ்டி விசாரணையை மேற்கொண்டுள்ளதாக தெரிகிறது. (மாவி.நி)

# புற்றுநோயை முற்ற விடக்கூடாது!

## வைத்திய நிபுணர் எச்சரிக்கை

[மாவிட்டபுரம்]

''புற்றுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டவுடன் தகுந்த வைத்திய சிகிச்சைகள் அளித்தால் அது குணமடையும். இந்நோய் ஓரளவு முற்றிவிட்டால் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதை தடுக்கவே முடியாது. ஆகவே புற்றுநோய் குறித்து மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.''

இவ்வாறு மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்ற புற்றுநோய் தொடர்பான கருத்தரங்கொன்றில் கலந்து பேசிய புற்றுநோய் ஆய்வு வைத்திய அதிகாரி திரு. பாலசுப்பிரமணியம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் புற்றுநோய் தொடர்பான ஆய்வு தற்போது நடத்தப்பட்டுவருகிறது. இந்த வாய்ப்பை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

மயிலிட்டிப் பகுதியில் பலருக்கு வாய்ப் புற்றுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் இருப்பதைச் சுகாதாரப் பகுதி அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். பாக்கு, வெற்றிலை, புகையிலை என்பன அதிகமாக உபயோகிப்பதாலேயே வாய்ப் புற்றுநோய் ஏற்படுகின்றது. இதன் ஆரம்ப அறிகுறி தெரிந்தவுடன் தகுந்த வைத்திய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள மக்கள் முன்வரவேண்டும். மக்கள் அசிரத்தையாக இருந்தால் உயிருக்கே ஆபத்து

(8-ம் பக்கம் பார்க்க)

## சாதனைத் தினம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சிநிலையத்தில் நான்குமாத குறுகிய காலப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறவிருக்கும் பெண் பயிற்சியாளர்கள் தாங்கள் படித்தவற்றையும் சாதித்தவற்றையும் தம் பெற்றோருக்கு எடுத்துக் காட்டுவதற்காக இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் சாதனை விழா ஒன்று நடத்தவிருக்கின்றனர். இதில் 46 படித்த இளம் பெண்கள் பங்குபற்றுவர். விவசாய உதவிப் பணிப்பாளராகவிருந்து இளைப்பாறிய திரு எஸ் நடேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார், பயிற்சி முடித்துவெளியேறும் பிள்ளைகளுக்குத் திருமதி. நடேசன் சான்றிதழ்கள் வழங்குவார்.

## றெட்பாறு ஸ்தாபனம்

# பரந்தன் — முல்லைத்தீவு வீதியை சீரமைக்க உதவும்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தைத் தொடர்ந்து பரந்தன் முல்லைத்தீவு வீதிமோசமாகச் சீர்கெட்டுள்ளது.

இந்த வீதியை மறு சீரமைப்பதற்கான உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்க 'றெட்பாறு' ஸ்தாபனத்தினர் முன்வந்துள்ளனர். இது குறித்து இத் தாபனத்தின் விஸ்வமடு-முல்லைத்தீவு பிரதேச திட்ட இணைப்பாளர் திரு. ஏ. ஜி. எஸ். பாலசந்திரன் யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளருக்குக் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில மோசமடைந்துள்ள பரந்தன்—முல்லைத்தீவு வீதியின் நிலைமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ் வீதி மேற்குறிப்பிட்ட இடங்களின் விவசாயிகளது பிரதான போக்குவரத்துப் பாதையாக இருப்பதுவும், வைத்திய மற்றும் அவசர தேவைகளுக்கு கிளிநொச்சி நகரையடைய இவ் வீதியே இருப்பதால் இதனை உடன் சீர்செய்யவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஸ்வமடு நீர்ப்பாசன விவசாயிகள் சனசமூக நிலையத்தவரும் இவ்வீதியைத்திருத்துவதற்கான உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர். இதுகுறித்தும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'றெட்பாறு' ஸ்தாபனம்இவ் வீதியில் தேங்கிநிற்கும் நீரை வடிந்தோடச் செய்வதற்கான உதவியளிக்கவும் இணங்கியுள்ளது. இப்பணிக்கான 'ஹாயும் குழாய்கள் அரசாங்கத்திடம் இல்லாதபட்சத்தில் அவற்றை வழங்குவதாக இத்தாபனம் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதியின் உரை மீது பாராளுமன்றில் விவாதம்!

## அனுராவின் கோரிக்கைக்கு இணக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனாவினால் நிகழ்த்தப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைவிளக்க உரைமீது அடுத்தமாதம் 7ம் திகதி பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்காவின் கோரிக்கைக்கிணங்க இவ் உரை மீது விவாதத்தை நடத்துவதென்று கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பாராளுமன்றம் அடுத்த மாதம் 6ம் திகதி கூடும் போது சோவியத் ஜனாதிபதி யூரி அந்ரபோவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையும் பாராளுமன்றத்தில்நிறைவேற்றப்படவுள்ளது. (இ-வெ)

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00: 'பிக் புளூமாபிள்-சிறுவர்நிகழ்ச்சி(ஆங்கிலம்)

6-25: சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)

6-55: செய்திகள் (தமிழ்)

7-15: ஆங்கில நிகழ்ச்சி

7-45: ஆங்கில நிகழ்ச்சி

8-15: செய்திகள் (சிங்களம்)

8-35: சிங்கள நிகழ்ச்சி

9-05: காதாம்பரி- பல்சுவை நிகழ்ச்சி(தமிழ்)

9-30: செய்திகள் (ஆங்கிலம்)

10-00: ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்' - துப்பறியும் தொடர் (ஆங்கிலம்)

10-30: உலகச்செய்தி தலைப்புகள்

10-35: ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்'

10-55: நிகழ்ச்சிகள் முடிவு

# சங்கிலிக் கொள்ளை: சந்தேகநபர் சரண்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி சங்கிலிக் கொள்ளை தொடர்பாகசந்தேகநபரான மயில்வாகனம் கருணன், பொலிசில் சரணடைந்துள்ளார்.

இம்மாதம் 18ம் திகதி இரவு 4,750 ரூபா பெறுமதியான இரண்டரைப்பவுண் சங்கிலி சாந்தினி கணேசலிங்கத்திடம் கொள்ளையடிக்கப்பட்டது!

பொலிசில் அவர் செய்த புகாரில் சம்பவதினம் தான் நித்திரையாக இருந்ததாகவும், இரவு 2மணிக்குஎழுந்திலிருந்த சங்கிலி அறுக்கப்பட்டதாகவும் மயில்வாகனம் கருணன் ஓடுவதைக்கண்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இதைத்தொடர்ந்து பொலிசார் விசாரணை மேற்கொண்டனர். சந்தேகநபர் பொலிசில் சரணடைந்தார். (க)

## யாருடையது?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. பதூர் சமான் என்பவர் திரு முத்துசாமி கந்தசாமி என்பவரின் அடையாள அட்டையையும் வேறு சில ஆவணங்களையும் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.


## கலர் பிலிம் சுருள் இனாம்!

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம்சுருள்களை எம்மிடம் PROCESSING AND PRINTING செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். PROCESSING ரூபா 30/- P. C. PRINTING ரூபா 6-50.

கொழும்பு ஸ்ருடியோ

யாழ்ப்பாணம் (508)

நீரைத் தோய்க்கும் வேலைச் சிரமம் வேண்டாம்.
உங்கள் சீருடைகள் மிகுந்த வெண்ணிறமடைவதற்குச் சிறந்த வழி, சிரமமில்லாத வழி, சிக்கனமான வழி
அது
மில்க்வைற் நீலங்கலந்த நீலக்கட்டிகளை
சம்பூரண சலவைக்காக உபயோகித்தலாகும்.
பளிச்சிடும் வெண்மைக்குப் பாவியுங்கள்

## மில்க்வைற் நீல சோப்




ரூபா 2-50

சிவராத்திரி தினத்தன்று திருக்கேதீஸ்வரத்திலே மலிவு விற்பனை உண்டு.

மில்க்வைற் தயாரிப்புகளின்
மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்கு
எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து
இனாம் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

மல்லாகம் - கல்லாரைப்பகுதி

# குழந்தைகளுக்கு இலவசபால்மா

(யாழ்ப்பாணம்)

''மல்லாகம் கல்லாரைப்பகுதியிலுள்ள ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாகப் பால்மா வகை வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது''

மல்லாகம் கல்லாரைப்பகுதி குடும்ப சுகநலத் திட்டவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திருமதி ஏ தேவநேசன் நேசையா பேசுகையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் டாக்டர் ஆ. சிவபாதம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

மகளிர் அபிவிருத்திப் பணியில் கல்லாரை குடும்ப சுகநல திட்டத்தினர் காட்டிவரும் அக்கறை குறித்தும் திருமதி தேவநேசன் பாராட்டுத் தெரிவித்தார்.

டாக்டர் திருமதி பொன்னம்பலம் பேசுகையில் ''குடும்ப சுகநலத் தொண்டர்கள் குடும்பத் திட்டத்தை மாத்திரம் போதிப்பதோடு நின்றுவிடாது தமது பகுதிகளின் குடும்பங்கள் தோறும் சென்று குடும்ப சுகம், தொற்று நோய்த் தடுப்பு, சத்துணவு, குழந்தைப் பராமரிப்புப் போன்ற ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வழங்கவேண்டுமென்றும்'' கேட்டுக்கொண்டார்

யாழ். குடும்பத்திட்டச் சங்கத் தலைவர் பேராசிரியர் வி. க கணேசலிங்கம், வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன், திட்டமிடல் அதிகாரி திரு ஏ எஸ் பூவேந்திரன், மல்லாகம் கிராம அபிருத்திச் சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

ஆரோக்கியமான தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பெண் தொண்டர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

குடும்பநலத்திட்டச் செயலாளர் திரு.ஜே பி. குணரத்தினம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

(யா)

## கடை உடைத்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவு நேரம் கடை உரிமையாளர் அங்கில்லாத சமயம் பார்த்து, கதவை உடைத்து உட்சென்ற திருடர்கள் அரிசி, மாவு, சீனி மூடைகளையும் டொபி-சவர்க்கார வகைகளையும் திருடிச்சென்றுள்ளார்கள்.

தெல்லிப்பழை கிழக்கு சித்தியம் புளியடியைச் சேர்ந்த கே தவரத்தினம் என்பவருக்குச் சொந்தமான கடையிலேயே இந்த திருட்டு நடைபெற்றுள்ளது.

மல்லாகம்-கட்டுவன் வீதியில் இக்கடை உள்ளது.

சம்பவதினம் நள்ளிரவு கடையின் முன்பக்கக் கதவை உடைத்து உள்புகுந்த திருடர்கள் சுமார் 9 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் களவாடியதாக சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(மா)

# திரிசாரணர் குழு ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டதிரிசாரணர் குழுவின் வருடாந்த விழாவும் சேவை நிதிபரிசளிப்பு விழாவும் இன்றுசனிக்கிழமை மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரிசாரணர் குழுத்தலைவர் பொறியியலாளர் திரு. ஜி. எஸ். அருமைதாஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் (பயிற்சி) திரு. என் நல்லையா உரை நிகழ்த்தவுள்ளார்.

பிரதம விருந்தினராக முன்னாள் மாவட்ட ஆணையாளர் திரு. சி சாந்தமூர்த்தி கலந்துகொண்டு பரிசில்கள் வழங்குவார்.

இவ்விழாவில் கல்லூரி சாரணர்கள் வழிகாட்டிகள். குருளைச் சாரணர்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. பரத நாட்டியம், இசை, கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

(மா)

# ''உலக மொழியான ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்''

## மாவையில் லயன்ஸ் ஆளுநர் இஸ்மாயில் கருத்து

(மாவிட்டபுரம்)

''நமது நாட்டில் இணைப்பு மொழியாகவும் உலக பொது மொழியாகவும் விளங்கும் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். நமது இளைய தலைமுறையினரிடையே ஆங்கில மொழி அறிவை வளர்க்க பயிற்சி வகுப்புகள் நடத்துவது அத்தியாவசியம்''

இவ்வாறு மாவிட்டபுரம் லயன்ஸ் கழக ஆதரவில் வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வளர்ந்தோருக்கான ஆங்கிலமொழி பயிற்சி நிலயத்தை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்துப் பேசிய இலங்கை லயன்ஸ் கழக ஆளுநர் டாக்டர் பாரீமி இஸ்மாயில் கூறினார்:

மாவிட்டபுரம் லயன்ஸ் கழக தலைவர் திரு ஆர் மனோகரன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''நமது பாடசாலைகளில் ஆங்கில மொழிக்குரிய முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. ஆனாலும் எல்லா மாணவர்களும் சிறப்பாக ஆங்கிலத்தை கற்க பாடசாலைகளில் சமனான வாய்ப்புகள் கிடைக்காமல் போகிறது. ஆகவே பொதுநல நோக்குள்ள ஸ்தாபனங்கள் வளர்ந்தோர் மத்தியில் ஆங்கில அறிவை வளர்க்க இவ்வாறான வகுப்புகளை நடத்துவது அவசியமாகும்''

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு த. சண்முகசுந்தரம் பேசுகையில்: நல்லதோர் முயற்சியை மேற்கொண்டுள்ள மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தினரையும் இந்த ஆங்கில பயிற்சி வகுப்புக்கு ஆரம்ப ஒழுங்குகளைச் செய்து உதவிய வீமன்காமம் மகா வித்தியாலயஅதிபர் திரு மு. சிவராசாவையும்பாராட்ட வேண்டியது நமது கடமை என்றார்.

இதனையடுத்து மாவிட்டபுரம் லயன்ஸ் கழக ஆதரவில் மாவிட்டபுரத்தில் யுவதிகளுக்கான தையற் பயிற்சி நிலையமொன்றும் திறந்து வைக்கப்பட்டது.

அதனை திறந்து வைத்துப் பேசிய லயன்ஸ் கழக ஆளுநர் டாக்டர் பாரீமி இஸ்மாயில் யுவதிகள் தையல் தொழிலில் தேர்ச்சிபெற்று அதனை ஒரு உபதொழிலாக கொண்டால் அவர்கள வாழ்க்கை சிறப்படையும் என்றார்.

இத்தையல் பயிற்சி நிலையத்துக்கு மாவிட்டபுரம் அலுமினிய தொழிற்சாலை பொறுப்பாளரும், பிரபல வர்த்தக பிரமுகருமான திரு தி. குமாரவேல் மூன்று தையல் இயந்திரங்களை அன்பளிப்பு செய்தார்.

(கு)

## பரந்தன் – கிளிநொச்சி ரோட்டறிக்கழகத் தலைவர்



கிளிநொச்சி-பரந்தன் ரோட்டறிக்கழகத்தின் புதிய தலைவராக ரோட்டறியன் ப. வை. ஜெயபாலன் தெரிவாகியுள்ளார் சிறந்த சமூகசேவையாளரான இவர் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் மகாஜனக் கல்லூரி, பல் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் பழைய மாணவர். பத்து ஆண்டுகளாக கிளிநொச்சியின் பல்வேறு சமய, சமூக, கலாசார அரசியல் சங்கங்களில் முன்நின்று உழைத்தவர்.

ஆறு மாதங்களாக ரோட்டறிக் கழகம் நடாத்தும் பரந்தன் அகதிமுகாமின் பொறுப்பதிகாரியாக முழு நேரப்பணியாற்றிவருகிறார் காந்திய இயக்கப் பிரமுகரான இவர் இப்பகுதி மலையகத் தமிழர்களின் நெஞ்சங்களில் சேவையால் நிறைந்துள்ளார்.

யாழ். விவசாயிகளுக்கு

# வெள்ள நிவாரணம் கோர குழு கொழும்பு சென்றது!

(யாழ்ப்பாணம்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு அரசிடமிருந்து நிவாரண உதவி கோரும் பொருட்டு யாழ். அரசாங்க அதிபர் தலைமையிலான உயர் மட்டக் குழு நேற்று முன்தினம் கொழும்பு புறப்பட்டுச் சென்றது.

யாழ் அரசாங்க அதிபரும் யாழ் மாவட்ட செயலாளருமான திரு தேவநேசன் நேசையா தலைமையில் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம், யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சமாஜத்தலைவர் திரு எஸ். சிவமகாராஜா, யாழ் மாவட்ட விவசாயிகள் அபிவிருத்தி சபை முன்னாள் உறுப்பினர் திரு. கே. சின்னத்துரை, திரு. கே. விஜயகுமார் ஆகியோரைக்கொண்ட குழுவே நேற்றுச்சென்றது.

இக்குழுவில் யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயகோனும் இடம்பெறுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவினர் விவசாய அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளரையும், விவசாய அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரையும் சந்தித்து பிரச்சினைகளை விளக்குவர்.

## விபத்து: மூவர் காயம்

(கோண்டாவில்)

மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டிகள் விபத்தில் மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்வியங்காடு சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அருகாமையில் பருத்தித்துறை வீதியில் நடைபெற்ற இவ்விபத்தில் வயோதிபர் ஒருவர் பாடசாலை மாணவர்கள் இருவரும் காயமடைந்தனர்.

(கு)

# இன்றைய பலன்

மாசி மாதம் 13-ம் திகதி

(25—2—84)

சனிக்கிழமை

மேடம்: வியாபாரத்தில் கஷ்டத்திற்கு இடமுண்டு தொழில் துறையில் தொல்லைகள் தோன்றக்கூடும் அதிக பேச்சைத் தவிர்க்கவும்.

இடபம்: பொதுத்துறையில் அதிகம் மனநாட்டம் செலுத்துவீர்கள். சிலர் அரசியல்துறையிலும் அடியெடுத்து வைக்கலாம். பெரியவர் ஒருவருடைய அறிவுரைகள் முன்னேற்றத்தைதரும் நல்லநாள்.

மிதுனம்: இதயத்தின் ஏக்கம் இன்று கனியும் தேடிய பொருள் காலடியில் சரணடையும் பரோபகாரசிந்தை மேலிடும் நண்பர் ஒருவர் கைகொடுத்துதவுவார் செல்வாக்குப் பெருகும்.

கடகம்: வேண்டிய வினவிற்கு இன்று வெள்ளிப் பணம் துள்ளும் புதிய நண்பர்களை இன்று தேடிக்கொள்வீர்கள் சகல துறைகளிலும் முன்னேற்றமுண்டு.

சிங்கம்: சிந்தனையின் தாக்குதலால் உடல்நிலை பாதிக்கலாம் மனதில் அமைதிகுன்றும் திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் தொழில் துறையில் தொல்லைகளுக்கு இடமுண்டு.

கன்னி: ஆசைவார்த்தைகளின் மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதை சுருட்டுவதற்குச் சிலர் முனைவார்கள் இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள் நிதானம் விரும்பத்தக்கது.

துலாம்: பெரிய இடத்துச் சினேகம் இன்று ஏற்படலாம் புதிய வழிகள் மூலம் பணம் கிடைக்கும் குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

விருச்சிகம்: மனைவியின் பூசல்கள் தோன்றி மறையும் தனிமையை விரும்புவீர்கள் தொழில் புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலைகள் நடைபெறும் நண்பர்கள் சூழ்ச்சி வலை விரிப்பதற்கு முற்படுவார்கள்.

தனுசு: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்திகாணும் மோகன வாழ்வுகிட்டும் முன்னேற்ற வாழ்வு முண்டு முதியவர் ஆசியுண்டு தாய்வழித்தனமும் சேரும்.

மகரம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும் புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும் நீண்டநாள் பிணி நிவர்த்தியாகும் பிள்ளையொன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்சிதரும்.

கும்பம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை தேடிக்கொள்வீர்கள் அமைதி நன்று

மீனம்: வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பங்கள் ஏற்படும் பந்துக்களின் கொண்டாட்டங்கள் பாவையர்களிப்பும் உண்டு புகழ் குவிந்து வரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
வேலுப்பிள்ளை ரவீந்திரன்

யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ் நகரிலேயே பதிவு செய்துகொள்ள

நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குறேஸ் ட்ரவல் சேர்விசஸ்(பிறைவேற்) லிமிட்.

பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, அமெரிக்கா

செல்வதற்கான சகல ஏற்பாடுகள் மற்றும் பயணச்சீட்டுக்களை

மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL
SERVICES (PTE) LTD,
STAGE II, MODEL MARKET.
No 5 1st FLOOR
BUS STAND CENTRE ROAD.
JAFFNA.
Phone: 22065, 22040

விசாரணை ஆரம்பித்த பின்னர்

# நீதிமன்றம் வந்த 50 பேர்: நீதவான் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் ஆரம்பித்த பின்னர் நீதிமன்றத்திற்கு தாமதித்து வந்த சுமார் 50பேர் நீதவானின் பணிப்பின் பேரில் பொலிசாரினால் வெளியேற்றப் பட்டனர்!

யாழ் நீதிமன்றத்தில் நீதவான் எஸ் நடராசா முன்னிலையில் நேற்று முன்தினம் காலை 9-30மணிக்கு நீதிமன்றம் ஆரம்பித்தது.

அதன்பின் பலர் உள்ளே வந்து இடம்பிடிக்க முயன்று கொண்டிருந்தனர். இதனை அவதானித்த நீதவான் அவர்களை வெளியில் அனுப்புமாறு பணித்து மீண்டும் அவர்களை அழைத்து எச்சரித்து நீதிமன்ற விசாரணை ஆரம்பிக்கு முன் உள்ளேவந்து இருந்துவிட வேண்டும் என்றும் அதன்பின் எவரும் உள்ளே வர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் நீதிவான் தெரிவித்தார். [க]

## பொய்யைப்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மையை எதிர்பார்ப்பது? பொய்யே பேசிப் பழகியவர் கருணாநிதி!

"என்னைக் கொலைக்காரன் என்கிறார். அவர் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை தான். தமிழ் நாட்டின் மக்கள் உள்ளங்களைக் கொள்ளையடித்தவன் நான். அதனால் அவர் சொல்வதையிட்டு மகிழ்கிறேன்.

## மயிலிட்டி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே செல்வரத்தினம் மூன்று வது சந்தேகநபர்மீது கொலை, கொலை முயற்சி குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படாமையால் அவரை பிணையில் விடுமாறு கோரினார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி திரு. ஆர். எஸ் ஜெயபாலன் மேற்படி 3 சந்தேகநபர்களையும் பிணையில் விடக்கோரி மேல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட விண்ணப்பத்தை மேல்நீதிமன்றம் நிராகரித்துள்ளதால் இந்த நீதிமன்றமும் பிணை விடமுடியாது என சுட்டிக் காட்டினார்.

சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மேல் நீதிமன்றத்தில் பிணைவிண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டசமயம் பொலிசார்மேற்படி 3 நபர்கள்மீதும் கொலை; கொலை முயற்சி குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவிருப்பதாக தெரிவித்ததாலேயே மேல்நீதிமன்றம் அதனை நிராகரித்தது ஆனால் இன்று இந்த நபர்கள் மீதான குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதில் 3 ஆவது சந்தேகநபர் மீது வாளால் வெட்டி சிறு காயம் விளைவித்ததாகவே குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. ஆகவே அவரை பிணையில் விட முடியும்'' என வாதிட்டார்'

இதையடுத்து நீதிபதி திரு சீ. வி. விக்னேஸ்வரன் 3 ஆவது சந்தேகநபரை 1000 ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காங்கேசன்துறைப் பொலிசில் சமூகமளிக்கவேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

ஏனைய இரு சந்தேகநபர்களும் இம்மாதம் 27ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப் பட்டுள்ளனர். (கு)

## கிணற்றில் தவறிவிழுந்து மரணம்

[மாவிட்டபுரம்]

கிணற்றடிக்கு முகம் கழுவச் சென்ற 8 வயதுச் சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறிவிழுந்து பரிதாபமாக மரணமானான்.

அராலி வடக்கில் நடந்த இச்சம்பவத்தில் இறந்தவர் செல்லத்துரை கமலநாதன் என்னும் சிறுவன் ஆவார்

இம்மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு கே. சேனாதிராசா விசாரணை நடத்தி விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## அனுதரவாக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான நேரத்தில் நீதிமன்றத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றும் பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். (க)


வெஸ்லி மானிப்பாய்
தினசரி 5-30, 6-00
சிவாஜி - விஜயா
சத்திய சுந்தரம்

மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-30, 6-00
முத்துராமன்-காஞ்சனா
பாலையா நாகேஷ்
காதலிக்க நேரமில்லை
(புத்தம் புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி-சுஜாதா
அந்தமான் காதலி
2 3 84 முதல்
BRUCE STRIKES BACK

வின்ஸர் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி— சரோஜாதேவி
பணமா பாசமா
27 முதல்
பால்குடம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
9-30
கமலஹாசன்-மாதவி
சுவப்னா-தியாகராஜன்
பாரதிராஜாவின்
டிக் டிக் டிக்
(ஈஸ்மன்கலர்)

லிடோ (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15, 9-30.
TWINS OF EVIL
விரைவில்
ஒருதலை ராகம்

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-00
9 30
எம். ஜி. ஆர்.-லதா-
வீரப்பா-நம்பியார்
பல்லாண்டு வாழ்க
ஈஸ்மன் கலர்/புதிய பிரதி

இன்னும் சில தினங்கள் மட்டும்
றீகல் (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
மோகன்...
திருமதி பாக்யராஜ்...
பயணங்கள்
முடிவதில்லை
- வண்ணம் -
From 1-3-84
SHAMMI KAPOOR
RAJSHREE...... IN
JANWAR
- Color -
Music - Shankar
Jaikishan

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-15, 4-45
7-00, 9-30
Roger Moore in
For Your
Eyes Only
Scope—Colour—Adults
LAST DAY 29-2-84
29-2-84 மகா சிவராத்திரி தினம்
"உங்கள் கண்களுக்கு மாத்திரம்"
நள்ளிரவுக் காட்சிகளும் உண்டு
...டவித் தினம் 29-2-84

ஹரன் (யாழ்.நகர்)
இரண்டாவது
குதூகல வாரம்!
திருலோகசந்தரின்
சிவாஜி, ஸ்ரீப்பிரியா,
வசந்தத்தில் ஓர்நாள்
(ஈஸ்மன் கலர்)


கொட்டகை நிறைந்த காட்சிகள்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
சுமன்— ஸ்ரீதேவி— தீபா
மீண்டும் கோகிலா
(ஈஸ்மன் கலர்)

"யோகட்"
★ சுத்தமான பாலில் இருந்து அதி நவீன தொழிற்சாலையில் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட யோகட் இன்று முதல் நவீன பிளாஸ்டிக் கொள்கலன்களில் உங்களுக்குக் கிடைக்கிறது
★ எமது தொழில் நுட்பமும் உற்பத்திகளும் சர்வதேச தரத்திற்கு ஒப்பானவை
★ எமது உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் எமது பிரதிநிதிகளுக்கு ஆதரவு நல்குங்கள்.
தயாரிப்போரும் சந்தைப்படுத்துவோரும்
MULTI FOODS
நல்லூர் — யாழ்ப்பாணம்
(992)


## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

க. மதியாபரணம் (மதி)

(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன உப-அஞ்சல் நிலையம், மண்டைதீவு)



மலர்வு:20 - 05 - 1951
உதிர்வு:25 - 02 - 1982

குடும்பத்தின் மூத்த கனியே! அன்பின் சிகரமாய் வாழ்ந்த நீ இன்னவரையும் பாசத்தால் அணைத்தாய்! கடமைக்குச் சென்ற உன்னை நடுவழியில் காலன் கவர்ந்தானே. இரண்டு ஆண்டுகளென்ன, எமது நெஞ்சிருக்கும் வரை நீ வாழ்வாய்.

உமது ஆன்மா இறைவனடியில் சாந்திபெறப் பிரார்த்திக்கும் அன்புத் தாய், தந்தை, சகோதரி, சகோதரர்கள், மச்சாள், மாமன்மார், உறவினர்கள் நண்பர்கள்.

28, ஆசீர்வாதப்பர்வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். 1008

## 1-ம் வருட நினைவஞ்சலி

திரு. முத்து முருகேசு

மலர்வு: 7-9-1909 உதிர்வு: 7-3-1983

திதி: 25-2-84



எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் பிரகாசித்து பண்பெனும் பாசத்தால் அமுதமொழி பேசி எமமைஉயர் வென்னும் உன்னத நிலையில் உருவாக்கிய அன்புத்தெய்வமே! வாழ்நாள் முழுவதும் எம்மை விட்டு நீங்காத அருந்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில்கொண்டு ஓராண்டு பூர்த்தியாகின்ற இன்றைய நாளில் உங்களது ஆத்மசாந்திடைய நல்லைக்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

'ஜெயபதி' 15/4 முருகேசர் ஒழுங்கை
நல்லூர். 991

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் செம்பற்சோதி குலேந்திரசிங்கம்

(ஓவசியர், பெருந்தெருக்கள் திணைக்களம்)

(பிறப்பிடம்: சண்டிலிப்பாய் வசிப்பிடம்: சூராவத்தை, சுன்னாகம்)

மலர்வு: 28-4-1925 உதிர்வு: 27-1-1984



பாசத்தால் பிணைந்து அன்பால் உயர்ந்து எம்மை எல்லாம் அரவணைத்த எங்கள் அன்புத் தந்தையே எங்கள் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும் உங்கள் உயிர் உடலை விட்டு அகன்ற போதும் நீவிர் ஏற்றி வைத்த பாச ஒளி எங்கள் உள்ளங்களில் என்றும் நிறைந்து நிற்கும். உங்கள் ஆன்மா சன்னிதானத்தை அடைய வேண்டும்.

துயருறும்

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அந்தியேட்டிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 26-2-84இல் கொண்டாடப்படும்.

அத்தருணம் உற்றார் உறவினர் வந்து கலந்து கொள்ளும்வண்ணம் வேண்டுகிறோம். (1004)

# வீட்டில் சோதனையிட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீதவான் கே. பி. எஸ். வரதராசா முன்னிலையில் யாழ் நீதிமன்றத்தில் நேற்றுப்பிற்பகல் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான கோப்ரல் எச் விமலசேனவின் மரண விசாரணை நடைபெற்றது.

காப்டன் பண்டார விஜயரத்ன தொடர்ந்து சாட்சிய மளிக்கையில் தெரிவித்ததாவது:-

''கெமுனு றெஜிமண்ட் பிரிவில் 78-ஆம் ஆண்டு சேர்ந்தேன். கடந்த ஒன்றரை மாதத்துக்குமுன் பலாலி இராணுவ முகாமுக்கு நியமனம் பெற்றுவந்தேன்.

## 35 வீரர்களுடன் சென்றேன்

''கடந்த வியாழக்கிழமை இரவு 12-45 மணியளவில் குருநகரில் இராஜசிங்கம் வீதியிலுள்ள 45-ம் இலக்க வீட்டில் சோதனையிட 35 இராணுவ வீரர்களுடன் சென்றேன்.

45-ம் இலக்க வீட்டைக் கண்டு பிடித்துவிட்டோம். அந்த வீட்டில் 'லைட்' வெளிச்சம் தெரிந்தது. வீட்டின் முன்கதவு பூட்டப்பட்டிருந்தது அந்த வீட்டை முற்றுகையிடும்படி இராணுவ வீரருக்கு உத்தரவிட்டேன். பின்னர் கதவை உடைத்து அங்கு தேடுதல் நடத்தினோம். கைக்குண்டு தயாரிக்கும் இரசாயனப் பொருட்கள், ஆணிகள், பாஸ்போர்ட், அடையாள அட்டைகள், கைத்துப்பாக்கி, தஸ்தாவேஜுகள் போன்றவைகளை அங்கிருந்து எடுத்துக் கொண்டோம். மேலும் ஒரு மணிநேரம் தேடுதல் நடத்திய பின்னர் அரைவாசி இராணுவத்தினரை எமது வாகனங்கள் உள்ள இடத்துக்குப் போகும்படி உத்தரவிட்டேன்.

## வாய்க்கால்களில் பதுங்கியிருந்தோம்

''குறிப்பிட்ட வீட்டில் 'லைட்' எரிந்தபடி இருந்ததால் வீட்டிலிருந்தவர்கள் வருவார்களென எதிர்பார்த்து வீட்டுக்கு முன்னால் உள்ள அவ்வீதி வாய்க்காலில் பதுங்கி இருந்தோம். அதிகாலை 5 மணியளவில், குருநகர் முகாம் பக்கமாக பெரிய வெடிச்சத்தம் கேட்டது. அப்பொழுது எங்களைச் சுற்றியும் கட்டிடத் துகள்கள் விழுந்தன. அப்பக்கமாக சில வீரர்களைப் போகும்படி உத்தரவிட்டேன். யாரோ நடமாடுவது மாதிரி தெரிந்தது ஒருவரையும் காணவில்லை.

## கிடுகுவேலி காணப்பட்டது

''நாங்கள் நின்ற வீட்டைச் சுற்றி கிடுகுவேலி காணப்பட்டது.

''எந்தப்பக்கத்திலிருந்தோ தெரியாது ஒரு வெடிச்சத்தம் கேட்டது. திருப்பிச்சுட்டோம். அப்பொழுது முனகல் சத்தம் கேட்டது கோப்ரல் விமலசேன வாய்க்காலுள் இரத்த வெள்ளத்தில் முனகிக் கொண்டு கிடந்தார் பின்னர் இறந்துவிட்டார்.

''வாக்கிடோக்கி' மூலம் சற்றுத்தூரத்தில் நின்ற எமது வாகனத்தை வரவழைத்து இறந்தவரை ஏற்றி யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று பிரேத அறைக்குள் வைத்தோம்'' என்றார்.

## ''விமலசேன இறந்தார்''

இராணுவவீரர் கோப்ரல் சந்திரசிறி (24 வயது) சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

''சம்பவதினம் இரவு காப்டன் விஜயரத்ன தலைமையில் 35 இராணுவ வீரர் சென்றோம். இறந்தவரும் கூட இருந்தார். குறிப்பிட்ட வீட்டை சோதனை செய்துவிட்டு வாய்க்காலில் ஒருபகுதியினர் பதுங்கி இருந்தோம். 5மணியளவில் குருநகர் முகாம் பக்கமாக வெடிச்சத்தம் கேட்டது அங்குநோக்கிச்சுட்டோம். யாரோ முனகிச்சத்தம்கேட்டது. இறந்த விமலசேன வாய்க்காலில் முனகியபடி கிடந்தார். எப்படி சூடுபட்டது என்றுகூற முடியாது பின்னர் அவர் இறந்துவிட்டார்''

மேல் விசாரணைக்காக இம் மாதம் 27ம் திகதிக்கு மேலதிக நீதவான் ஒத்திவைத்தார்.

---

# மரண அறிவித்தல் — திருத்தம்

6-2-84 திகதிய 'ஈழநாடு' கடைசிப் பக்கத்தில் வெளியான 637ம் இலக்க ''சுவாமிநாதபிள்ளை செல்லையா'' அவர்களின் மரணம் சம்பந்தமான விளம்பரத்தில் Dr. சிறீபத்மநாதன் [லண்டன்] என்பது, தவறுதலாக சிறீபத்மநாதன் (லண்டன்) என இடம்பெற்றுவிட்டது. இத்தவறுக்கு வருந்துகிறோம். 1020

---

# மரண அறிவித்தல்

## நா. அருமைநாயகம்

[ஆத்மஜோதி நிலையம்]

ஆத்மஜோதி நிலையத்தைச் சேர்ந்த அருமைநாயகம் காலமானார். இவர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியை தங்கேஸ்வரியின் அன்புக்கணவரும், குருபரன், சதானந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், ஆத்மஜோதி முத்தையா, காலஞ்சென்ற கந்தையா, திருமதி பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

''குரு பவனம்''
கண்டி வீதி-சாவகச்சேரி.

(1015)

---

# மரண அறிவித்தல்

## திருமதி செ. மேரியோசேப்பின்



திருமதி மேரியோசேப்பின் செபஸ்ரியன் அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. மனுவல செபஸ்ரியன் [முன்னாள் சக்கோட்டி தார்] அவர்களின் அருமை மனைவியும்.

ஜோஜஸ் ஜரிஸ்ரி, ஜெனட் யூலியானு அலோசியஸ், விஸ்ரன், யூஜின், மைக்கல் அஞ்சலோ, யோண் மேரிவியன்னி ஆகியோரின் அன்புத்தாயாரும்.

முன்னாள் வட்டாரக் கல்வியதிகாரி தோமஸ் பிள்ளை அலோசியஸ், சாறின் றஞ்சினி குன்சாறின், பெத்த, அனக்சிய றீறு ஆகியோரின் அன்பு மாமியும்.

தோமஸ் அசோக், இசோக், மோகன், ஒக்சீலியா, அஞ்சனா, றமேஷ், மனுவேலா, தானியா, அகிலன், மைக்கல், கில்டமாறி ஜேன் ஏஞ்சல், ஜெனட்சிசீலியா யூட்குமார் ஆகியோரின் அருமைப்பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை (26-2-84) ஞாயிற்றுக்கிழமை பி ப. 4 மணிக்கு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

117, டேவிற் ரோட்,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

1023

---

# பொலிசார்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வான்களையும் நோக்கி பொலிசார் சரமாரியாகத் துப்பாக்கிகளால் சுட்டதாகவும் இருவான்களுக்குள் இருந்த சிலர் தப்பியோடும் பொழுது ஒருவர் துப்பாக்கிச் சூடுபட்டு ஸ்தலத்திலேயே பலியானதாகவும் மற்றவர்கள் பண்ணை சகதிகளுக்குள்ளால் தப்பியோடி விட்டதாகவும் கூறப்படுகிறது.

மாயமாக மறைந்த லொறிக்குள் இருந்த இரும்புப் பெட்டிக்குள் வங்கி தஸ்தாவேஜுகள் மாத்திரமே வைக்கப்பட்டிருந்ததாம்.

பொலிசாரால் கைப்பற்றப்பட்ட 84 ஸ்ரீ 154 இலக்கம் கொண்ட வானில் ஒரு இரும்புப் பெட்டியும், அடுத்துள்ள 84 ஸ்ரீ 4322 இலக்க வானில் ரைப்றைட்டர், தீயணைக்கும் கருவி, எண்கட்டும் இயந்திரம், தொலைபேசி மற்றும் அலுவலக உபகரணங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

பொலிசாரால் கைப்பற்றப்பட்ட வானில் இருக்கும் இரும்புப்பெட்டிக்குள் வங்கிப்பணம் இருக்கலாம் என்று பொலிசார் தெரிவித்தனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இப் பெட்டி உடைக்கப்படவில்லை.

சுமார் ஆறேகால் லட்சம் ரூபா இப்பெட்டிக்குள் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

வடபகுதியில் இலங்கை வங்கியொன்று கொள்ளையடிக்கப்பட்டது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

---

றேயல் வி. கழகம்

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் றேயல் விளையாட்டுக் கழகத்தின் 9-வது ஆண்டு விழா நாளை கொண்டாடப்படுகிறது.

இவ்வாண்டு விழாவினையொட்டி றேயல் வி. கழகம் ஒழுங்கு செய்த அகில இலங்கை கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி 26-ம் திகதி உடுவில் பிரதேச உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ ஜே. செயநாயகம் முன்னிலையில் சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ்விறுதிப் போட்டியில் சுன்னாகம் வளர்பிறை வி. க. கோஷ்டியும், கலைமதி வி. க. கோஷ்டியும் மோதுகின்றன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு பாலசிங்கம் உட்பட பல பிரமுகர்கள் இவ் விளையாட்டு விழாவில் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்கின்றனர். றேயல் விளையாட்டுக் கழகத்தின் 9-வது ஆண்டு விழாவின் விசேஷ அம்சமாக சுன்னாகம் பொலிஸ் கோஷ்டிக்கும் ஆவரங்கால் மத்திய வி. க. கோஷ்டிக்குமிடையிலான புதிய முறை 'செட்-அப்' கரபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது. (கு

---

# துப்பாக்கி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேரி றேசலினுக்கு இரு துப்பாக்கிச் சூடுகளும், அவரின் மகன் சுரேஸுக்குத் தலையின் பின்பக்கம் இருதுப்பாக்கிச் சன்னங்களின் உரசல் காயங்களும் இருப்பதாகவும் இருவருக்கும் உயிராபத்தில்லை யென்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன

வெடிச்சத்தம் கேட்டு அதிகாலை 5மணியளவில் தங்கள் வீட்டின் வாசல்பக்கமாக வந்து நின்றபொழுது எதிர்பாராதவிதமாக துப்பாக்கிச் சூடுகள் இவர்கள் பக்கமாகவும் தாக்கியதால் மேற்படி சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது

சம்பவதினம்அதிகாலை இறந்தவரின் மூத்த சகோதரர் வீட்டின் முற்றத்தில் சூப்புறப் படுத்திருந்ததால் துப்பாக்கிச் சூட்டிலிருந்து தெய்வாதீனமாகத் தப்பித்துக்கொண்டாராம்.

இச்சம்பவநேரம்இவ்வீதியில் உள்ள ஒரு வீட்டில் இராணுவத்தினர் முற்றுகையிட்டு சோதனை நடத்திக்கொண்டிருந்தது தெரிந்ததே. (மச)

---

# புற்றுநோயை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படும் நிலையே ஏற்படும்'' என்றார்.

காங்கேசன்துறை சுகாதாரப் பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் பேசுகையில்:-

''மக்கள் மத்தியில் நோய்கள் அவற்றை குணப்படுத்தும் முறைகள் பற்றிய சுகாதார நலக்கல்வியறிவு போதாமல் இருப்பதாலேயே நோய்கள் முற்றி ஆபத்தை உண்டு பண்ணுகின்றன. வைத்திய சிகிச்சையால் குணப்படுத்தக் கூடிய நோயாக இருந்தாலும் மக்கள் அதுகுறித்து அக்கறை கொள்ளாது விடுவதால் நோய் முற்றி விடுகிறது. ஆகவே மக்கள் மத்தியில் சுகாதார நலக் கல்வி தொடர்பான போதனைகளை மேற்கொள்ள வேண்டும். தமது இளைஞர் சந்ததியினராவது இதுவிடயத்தில் விழிப்பாக இருக்க வழி வகுக்க வேண்டும்''

வித்தியாலய அதிபர் திரு. அப்புத்துரை நன்றி கூறினார்.

---

# மரண அறிவித்தல்

## சின்னையா முருகேசு (விவசாய பிரமுகர்)

சின்னையா முருகேசு காலமாகிவிட்டார். இவர் கனகேஸ்வரியின் அன்புக்கணவரும் சிவபாலன் (யாழ். வளாகம்). தேவபாலன் (சிரியா), தனபாலன் (சென். பற்றிக்ஸ் ஆசிரியர்), குணபாலன் (நைஜீரியா), சந்திரபாலன் (சுவிஸ்லாந்து) ஜீவச்சந்திரமணி, சுந்தரபாலன், கிருஷ்ணபாலன், நந்தபாலன், விஜயபாலன் ஆகியோரின் அன்பு தந்தையாரும், ராஜராஜேஸ்வரி, ராஜகுலதேவி, கோசலா ஆகியோரின் அன்புமாமனும், சுகாஜினி, தனுஜலா, சிவகரன், ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25-2-1984) மாலை 4மணிக்கு யாழ்ப்பாணம் முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 022

---

# மரண அறிவித்தல்

## திரு. செல்லையா ஆதிரத்தினம்

ஆதிரத்தினம் (இளைப்பாறிய புகையிரத எண்யாக்கி பார்வையாளர்) அவர்கள் காலமானார். இவர் புஷ்பவதியின் அன்புக் கணவரும் சின்னராஜா [உதவி அரசாங்க அதிபர் சம்மாந்துறை], லீலாமணி (ஓய்வு பெற்ற ஆசிரியை, கைதடி ம ம வித்தியாலயம்), யோகமணி (கோலாலம்பூர்), கிருஷ்ணராஜா [Grand met, Managing Director] செல்வராஜா [ஓமான்] ஆகியோரின் அன்புத்தந்தையும், விமலா, நமசிவாயம் [ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி], தெய்வேந்திரராஜா, [கோலாலம்பூர்], ஞானு, ராணி ஆகியோரின் மாமனும், வித்தி, வாசுகி, ஜனனி, யாழினி, ராகவன், பிரபா, உமா, சிவா, ஹேமா, மீனு, ராஜி, கண்ணு, திவாகேஸ், ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று [25 2-1984] பிற்பகல் 3 மணிக்கு 40 B, பலாலி வீதி, கந்தர்மடத்திலிருந்து தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

1024

இலங்கைத்தீவின் ''ஈழநாடு'' லிமிடெட் தொழிலதிபர்களால் யாழ்ப்பாணம், ... வீதி, ... இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, ... No: ... 183236/31. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.